**கவனிக்க.**-2020.03.06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2167 - 2020 මාර්තු මස 13 වැනි සිකුරාදා - 2020.03.13

*2167 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *178* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *181* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, மாச்சு மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவையாற்றும்படி கேட்கப்படலும்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலும். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று சேவை வகுதியின் III ஆம் தரத்தின்) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2020

*கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்*

*மஹாவலி, விவசாய, நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதியின் III ஆம் தரத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவியில் நிலவும் வெற்றிடத்தை நிரப்புவதன் பொருட்டு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1.* **ஆட்சேர்ப்பு முறை.**- *அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் மத்தியில், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக் குழுவினால் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய, உச்சப் புள்ளிகளை பெற்றுக் கொள்கின்ற விண்ணப்பதாரி நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். அங்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ள (இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கும் செயன்முறைக்கு அமைய தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.*

*நியமனம் செய்யப்படும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.*

*2.* **தேவையான தகைமைகள்**

(i) *கல்வி/தொழிற் தகைமைகள்*
*உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.*

(ii) *அனுபவம்*
*உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவர் என்ற வகையில் சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர் சட்டத்தரணியாக மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத உயிர்ப்பான தொழில் ரீதியான அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். (உயிர்ப்பான தொழில் அனுபவத்தை உறுதி செய்வதன் பொருட்டு சமர்ப்பிக்கின்ற ஆவணங்களில் அனுபவத்தை பெற்றுக்கொண்டுள்ள காலம், திகதி மற்றும் உத்தியோகபூர்வ இலட்சனைத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.)*

*அல்லது*

*உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவர் என்ற வகையில் சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் அரசாங்க நிறுவனம் ஒன்றில் சட்டத்துறையில் மூன்று 03 வருடங்களுக்குக் குறையாத கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளில் உரிய அனுபவத்தைப் பெற்றிருத்தல்.*

(a) *வழக்குகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து செய்யும் நடவடிக்கைகள்.*
(b) *உடன்படிக்கைகள் மற்றும் அது தொடர்பான நாளாந்த நடவடிக்கைகள்*
(c) *உரிய சட்ட ஒழுங்குமுறை தொடர்பான நாளாந்த நடவடிக்கைகள்*
(d) *சட்டவரைவுகள் மற்றும் சுற்றறிக்கைகள், ஒழுங்குவிதிகள் போன்ற சட்டரீதியான ஆவணங்கள் தொடர்பான நடவடிக்கைகள்*
(e) *வெவ்வேறு சட்டபூர்வ நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற சட்டம் அல்லது நீதித்துறை செயற்பாடுகள் அல்லது விசாரணை நடவடிக்கைகள்.*

*(இந்த விடயங்கள் செயலாளர், திணைக்களத் தலைவரினால் வெளியிடப்பட்ட சான்றிதழின் ஊடாக மற்றும் ஆவணங்களின் ஊடாக உறுதிப்படுத்துதல் வேண்டும்.)*

(iii) *உடற்தகைமை*

சகல விண்ணப்பதாரரும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், கடமைகளை நிறைவேற்று வதற்கும் போதியளவு உடல் மற்றும் உள தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

(iv) *ஏனைய தகைமைகள்*

- இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.
- சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பத்தினைக் கோரும் இறுதித் தினத்தன்று பதவிக்குச் சேர்த்துக் கொள்வதற்கான சகல தகைமைகளையும் சகல முறைகளிலும் முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**3. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகளும் மற்றும் சேவை நிபந்தனைகளும்**

(i) இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையது. உமக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டமுறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் தீர்மானத்திற்கு நீர் உட்படுத்தப்படுவீர். மேலும் நீர் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு/தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும். தாங்கள் காலத்துக்கு காலம் அரசாங்கம் பிரகடனப்படுத்தும் விதத்தில் இந்த நிதியத்துக்கு உதவு தொகைகள் செலுத்துதல் வேண்டும்.

(ii) நியமனம் மூன்று வருடகால தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படும். பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்து 03 வருடங்கள் பூர்த்தி செய்வதற்கு முன்னர் ஆட்சேர்ப்பு செயன்முறையில் விதித்துரைக்கப்பட்டதற்கு அமைய முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி எய்தியிருப்பது கட்டாயமாகும்.

(iii) 2014.01.21 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இற்கு அமைய மற்றும் அது சார்ந்த சுற்றறிக்கைகளின் ஒழுங்கு விதிகளுக்கு அமையவும் இந்த பதவிக்கு நியமனம் செய்யப்பட்டு 05 வருடத்திற்குள் சேவைக்கு இணைந்து கொண்ட மொழிக்கு மேலாக ஏனைய மொழி தொடர்பிலும் உரிய தேர்ச்சியை பெற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன் அரசாங்க மொழி அல்லாத மொழி மூலத்தில் சேவைக்கு ஈர்ப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தகுதிகூர் காலத்தினுள் உரிய அரச மொழி தேர்ச்சியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கும், நிதிப் பிரமாணத்திற்கும் மற்றும் திணைக்களத்தின் ஏனைய விதிகளுக்கும் இந்நியமனம் உட்படுத்தப்படும்.

4. **வயது எல்லை**.- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 21 வயதுக்கு குறையாமலும் 45 வயதினை விஞ்சிவிடாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பளத் திட்டம்**.- இந்த பதவிக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,615.00 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 1,10,895.00 ஆகும். (2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 3/2016 இன் SL-1-2016 ஆம் இலக்க சம்பளத்தொகுதியாகும். உமக்கு சம்பளம் வழங்கப்படுவது அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய அதன் உப அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கும் அமையவாகும்.)

06. தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளியிடல் செயன்முறை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

| இலக்கம் | விடயம் | புள்ளிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 25 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றினால் பெற்ற சட்டம் தொடர்பான பட்டப் பின்படிப்பு | 25 | |
| | அரசாங்கம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற சட்டத்துறைக்கு உரியதாக பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப் பின்படிப்பு டிப்ளோமா அல்லது பட்டப் பின்படிப்பு சட்ட டிப்ளோமா (ஒரு வருடத்திற்குக் குறையாத) | 20 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் ஒன்றினால் பெற்ற சட்டம் தொடர்பான பட்டப் படிப்பு | | |
| | முதலாம் வகுப்பில் சித்தியடைதல் | 15 | |
| | இரண்டாம் வகுப்பு மேல் நிலையில் சித்தியடைதல் | 10 | |
| | இரண்டாம் வகுப்பு கீழ் நிலையில் சித்தியடைதல் | 07 | |
| | சாதாரணமாக சட்டத்துறையில் பட்டமொன்று | 05 | |
| | சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டு முதலாம் வகுப்பில் சித்தியடைதல் | 10 | |
| | சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டின் இரண்டாம் வகுப்பில் சித்தியடைதல் | 05 | |
| | **குறிப்பு**: கௌரவ சித்தியுடன் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து இருந்தால் மாத்திரம் 05 புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும். (உச்சமாக ஒரு தகைமையின் பொருட்டு மாத்திரம் புள்ளி வழங்கப்படும்.) | | |
| 02 | **மேலதிக தொழில் அனுபவம்** | | 35 |
| | **(i) மேலதிக தொழிற் தகைமை** | 10 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவனம் ஒன்றினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற சட்டத்துறைக்கு உரிய ஒரு வருடத்திற்கு மேற்பட்ட டிப்ளோமாவின் பொருட்டு (ஒரு டிப்ளோமாவுக்கு 10 புள்ளிகள் என்ற அடிப்படையில்) | | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவனம் ஒன்றினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற சட்டத்துறைக்கு உரிய ஆறு மாதத்திற்கு மேற்பட்ட மற்றும் ஒரு வருடத்திற்கு குறைவான டிப்ளோமாவின் பொருட்டு (ஒரு டிப்ளோமாவுக்கு 05 புள்ளிகள் என்ற அடிப்படையில்) | | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவனம் ஒன்றினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற சட்டத்துறைக்கு உரிய மூன்று மாதத்திற்கு மேற்பட்ட மற்றும் 06 மாதத்திற்கு குறைவான சான்றிதழ் பாடநெறியின் பொருட்டு (ஒரு பாடநெறிக்கு 03 புள்ளிகள் என்ற அடிப்படையில்) | | |
| | (இலக்கம் 01 இன் கீழ் புள்ளிகள் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் தவிர ஏனைய) | | |

| இலக்கம் | விடயம் | புள்ளிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| | (ii) **மேலதிக அனுபவம்**<br><br>விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் 2. (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுபவம். (அடிப்படை தகைமைகளை பெற்றுக் கொள்வதன் பொருட்டு தேவையான 03 வருட அனுபவம் தவிர்ந்த)<br>- ஒரு வருடத்திற்கு 5 புள்ளிகள் என்ற வீதத்தில் உச்சப் புள்ளிகள் 25<br>- 06 மாதத்திற்கு மேல் ஒரு வருடத்திற்கு குறைவு - 02 புள்ளிகள்<br><br>* 15 வருடத்திற்கு குறையாத சேவைக் காலத்தை பூரணப்படுத்துகின்ற (இந்த சேவைக் காலம் விண்ணப்பதாரருக்கு என வெளியிடப்படுகின்ற சான்றிதழிலே குறிப்பிடப்படுதல் வேண்டும்.) சட்டத்தரணி ஒருவர் அல்லது சனாதிபதி சட்டத்தரணி ஒருவரினால் அல்லது ஒரு நீதிபதி ஒருவரினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற சான்றிதழின் ஊடாக உறுதிப்படுத்துதல் வேண்டும்.<br><br>* மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் அல்லது தனியார் துறையில் உள்ள உத்தியோகத்தர் பொருட்டு நிறுவன தலைவரினால் மேலதிக அனுபவத்தை உறுதி செய்கின்ற போது விண்ணப்பதாரர் சட்டத்துறை பதவி ஒன்றில் சேவை புரிகின்றார் என்பதை சேவை சான்றிதழ்/ சான்றிதழ்களின் ஊடாக சான்றுபடுத்தப்படுதல் வேண்டும்) | 25 | |
| 03 | **தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு** | | 10 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டமொன்று தொடர்பாக தகவல் தொழில் நுட்பத்தினை பிரதான பாடமொன்றாகக் கற்றிருப்பது தொடர்பாக | 10 | |
| | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு வருடம் அல்லது 1500 மணித்தியாலங்கள் குறையாத தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா கற்கைநெறியின் பொருட்டு | 07 | |
| | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் கற்கை நெறியின் பொருட்டு | | |
| | • 06 மாதம் /720மணித்தியாலம் | 05 | |
| | • 03 மாதம் /360 மணித்தியாலம் | 03 | |
| 04 | **மொழித் தேர்ச்சி** | | 15 |
| | ஆங்கில மொழி மூலம் மேற்கொள்ளப்பட்ட பட்டப்பின் படிப்பு பட்டம்/பட்டம்/ பட்டப்பின் சட்ட அறிஞர் பட்டம்/சட்ட அறிஞர் பட்டம் உரிய பரீட்சையில் சகல வினாப்பத்திரங்களும் ஆங்கில மொழியில் விடையளித்து இருத்தல் வேண்டும். | 15 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக் கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து ஆங்கில மொழி தொடர்பாக 01 வருடம் அல்லது 1500 மணித்தியாலங்களுக்கு குறையாத டிப்ளோமா பாடநெறியின் பொருட்டு | 10 | |
| | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து ஆங்கில மொழி தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ் பாடநெறியின் பொருட்டு | | |
| | - 06 மாதம் /720மணித்தியாலம் | 07 | |
| | - 03 மாதம் /360 மணித்தியாலம் | 05 | |
| | (உச்ச தகைமைகள் பொருட்டு மாத்திரம் புள்ளிகள் பெற்றுக் கொடுக்கப்படும்) | | |

| இலக்கம் | விடயம் | புள்ளிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 05 | **நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்படும் திறமை** | | 15 |
| | பொது அறிவு மற்றும் அறிவாற்றல் | 05 | |
| | சட்டத்துறையில் நவீன போக்குகள் தொடர்பான அறிவு | 05 | |
| | தெளிவாக கருத்துக்களை முன் வைக்கும் ஆற்றல் மற்றும் ஆளுமை | 05 | |
| மொத்தப் புள்ளிகள் | | | 100 |

**குறிப்பு**.- தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படுகின்ற சான்றிதழ்களுக்கு உரிய கால எல்லைகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டில்லாது விடின் அத்தகைய சான்றிதழ்களுக்கு உரிய கால எல்லையை உரிய நிறுவனத்தின் ஊடாக எழுத்து மூலம் உறுதிப்படுத்தி சமர்ப்பிப்பது விண்ணப்பதாரரது பொறுப்பாகும். அவ்வாறு கால எல்லையை குறிப்பிடப்படாது உள்ள மற்றும் கால எல்லையை உறுதிப்படுத்தப்படாத சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்குவது தொடர்பில் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

7. **விண்ணப்பதாரரது ஆளடையாளம்**.- தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது சகல விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற விண்ணப்பதாரர்கள் மாத்திரமாகும்.

நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் உரியவாறு சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது தமது ஆளடையாளத்தை சான்றுப்படுத்தும் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுகள் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்படுகின்ற தேசிய அடையாள அட்டை
(ii) ஏற்றுக்கொள்ளத்தக்க கடவுச் சீட்டு

8. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் முறை**.-

(i) விண்ணப்பங்கள் 2020.04.03 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அதன் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
த. பெ. இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை.

(ii) சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பத்தின் மாதிரிப் படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர் அவர்களது விண்ணப்பங்களை A4 அளவான கடதாசியில் தயாரித்து முதலாவது பக்கத்தில் 1.1 முதல் 3.1 வரையிலும், இரண்டாம் பக்கத்தில் 3.2 முதல் 4.7 வரையிலும், மூன்றாம் பக்கத்தில் 5 முதல் 8 வரையிலும் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்டு தமது சொந்த கையெழுத்தினால் நிரப்பப்படுதல் வேண்டும்.

(iii) விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட உத்தியோகத்தர் III ஆம் தரத்தின் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி /நொத்தாரிஸ்/முப்படைகளில் அதிகார உத்தியோகத்தர் அல்லது ரூபா 47,615.00 அல்லது அதற்கு மேல் மாதாந்த ஒருங்கிணைந்த சம்பளம் பெறுகின்ற அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுபடுத்துதல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தமது சேவை நிலைய திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

(vi) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ப அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் போன்ற எவ்வித முறைபாடுகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

9. **பிழையான தகவல்களை வழங்குதல்.-** உங்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் ஏதும் போலியானது அல்லது பிழையானது என ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் உங்களது விண்ணப்பத் தகைமை நிராகரிக்கப்படும். ஏதும் போலியானது அல்லது பிழையானது என ஆட்சேர்ப்பு செய்ததன் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்கு உரியவாறான செயற்பாடுகளுக்கு நீங்கள் உட்படுத்தப்பட்டு சேவையில் நின்றும் நீக்கப்படுவீர்.

10. பதவி வெற்றிடங்களை நிரப்புவது நிரப்பாமல் விடுவது தொடர்பான உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவிற்கே உரித்தாகும்.

11. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களுக்கு இடையே ஏதேனும் பொருந்தாத் தன்மை அல்லது முரண்பாடு ஏதும் எழுமிடத்து சிங்கள வாசகமே மேலோங்கி நிற்கும்.

12. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயம் தொடர்பில் அல்லது இந்த ஆட்சேர்ப்புச் செய்யும் செயன்முறையினுள் ஏதாவது பிரச்சினைகள் எழுமாயின், அது தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
மஹாவலி, விவசாய, நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு.

2020, சனவரி

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மஹாவலி, விவசாய, நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சுக்கு உரிய கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்**

☐

(அலுவலக உபயோகத்துக்கு)

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம்
(உரிய இலக்கத்தை அடைப்பில் எழுதுக.)

| | | |
|---|---|---|
| சிங்களம் | 2 | |
| தமிழ் | 3 | ☐ |
| ஆங்கிலம் | 4 | |

**குறிப்பு** : விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை மாற்ற முடியாது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

01.

1.1 முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ..............................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) : ..............................................................................................
(உதாரணம் : GUNAWARDHANA, M. G. B. S. K.)

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெபிட்டல் எழுத்துக்களில்) :.......................................................................
.......................................................................

1.3. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) : .......................................................................
(சிங்களம்/தமிழ்) .......................................................................

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் : .......................................................................
(ஆங்கில கெபிட்டல் எழுத்துக்களில்) .......................................................................

02. 2.1 நிரந்தர முகவரி : .......................................................................
(சிங்களத்தில்/தமிழில்) .......................................................................

2.2 நிரந்தர முகவரி : .......................................................................
(ஆங்கில கெபிட்டல் எழுத்துக்களில்) .......................................................................

2.3 தொலைபேசி இலக்கம் : .......................................................................

03. 3.1 பால் (உரிய இலக்கத்தை அடைப்பில் எழுதவும்)
ஆண் 0
பெண் 1 ☐

3.2 குடியியல் நிலை (உரிய இலக்கத்தை அடைப்பினில் எழுதவும்)
விவாகமானவர் - 1
விவாகமாகாதவர் - 2 ☐

3.3 பிறந்த திகதி
ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.4 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி அன்று வயது :
வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.5 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

04. 4.1 நேர்முகப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பம் செய்வதற்கு விண்ணப்பம் கோரல் அறிவித்தலுக்கு அமைய பெற்றுக்கொண்டுள்ள தகைமைகள் தொடர்பான விபரம்.

| தகைமையை பெற்றுக்கொண்ட நிறுவனம் | பெற்றுக்கொண்ட திகதி |
|---|---|
| .................................................................. | .......................................... |
| .................................................................. | .......................................... |
| .................................................................. | .......................................... |

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப் பிரமாணம் செய்த திகதி :...............

4.2 விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு தகைமையையும் பெற்றுக்கொண்டமை தொடர்பான விபரம் :

4.3 மேலதிக கல்வித் தகைமைகள் : .......................................................................
.......................................................................
.......................................................................

4.4 மேலதிக தொழில் தகைமைகள் : .......................................................................
.......................................................................
.......................................................................

4.5 மேலதிக அனுபவம் : .......................................................................
.......................................................................
.......................................................................

4.6 மொழித் தேர்ச்சி : ........................................................................................................
........................................................................................................
........................................................................................................

4.7 தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு : ........................................................................................................
........................................................................................................
........................................................................................................

05. நீர் ஏதாவது குற்றத்தின் காரணமாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக கருதப்பட்டுள்ளீரா?
(உரிய கூண்டில் " ✓ " அடையாளம் இடுக.) (ஆம் எனில் விபரிக்க)

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

06. விண்ணப்பதாரரது உறுதியுரை :

இவ் விண்ணப்பத்தில் தன்னால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும், சகல பகுதிகளையும் சரியாக நிரப்பி உள்ளேன் எனவும், தன்னால் மேற்கொள்ளப்படுகின்ற இந்த உறுதியுரை பிழையானது என நிரூபிக்குமிடத்து நியமனம் செய்வதற்கு முன் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவு செய்த பின்னர் அவ்வாறு தெரியவருமிடத்து சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன் எனவும், சகல விதமான சட்ட ஒழுங்கு விதிகளுக்கும் நான் உடன்படுகின்றேன் எனவும் உறுதியுரைக்கின்றேன்.

.............................................
திகதி: ............................ விண்ணப்பதாரரின் கையொப்பம்

07. விண்ணப்பதாரரது கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ................................................................. என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும், அவர் என் முன்னிலையில் ............ ஆம் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி : ......................................

முழுப் பெயர் : ...................................
பதவி : .......................................
திகதி : ......................................
(அலுவலக முத்திரையால் உறுதிப்படுத்தவும்.)

08. திணைக்களத் தலைவரினது பரிந்துரை : (தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

இத்திணைக்களத்தின் ...................................................... ஆக கடமை மேற்கொள்கின்ற திரு./திருமதி/செல்வி ......................... ............................................................... என்பவரால் தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சிக்கப்பட்டது எனவும், அவை சரியானது எனவும், இவ்வுத்தியோகத்தர் மேற்குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவு செய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/முடியாது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(அலுவலக முத்திரை)

பதவிப் பெயர் : ..................................
முகவரி :.........................................
திகதி : ......................................

03-410

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## நீதிமன்ற மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு

*சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அரசாங்க சட்டவாதி பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2020*

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரசாங்க சட்டவாதி பதவிக்கான 50 வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு கீழ்க்காணும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை.**- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையின் மூலம் நடாத்தப்படும் ஆரம்ப தகுதிகாண் நேர்முகப் பரீட்சையின் மூலம் 50 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளினைப் பெறும் விண்ணப்பதாரிகளில் வெற்றிடம் நிலவும் எண்ணிக்கையின் இரண்டு மடங்கானோர் இறுதி தகுதிகாண் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். இறுதி தகுதிகாண் நேர்முகப் பரீட்சையில் திறமை அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆட்சேர்ப்பு செய்யப்படும். அதன்போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 05 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கும் முறைக்கமைவாக ஆரம்ப தகுதிகாண் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனம் வழங்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி என்பன அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய தீர்மானிக்கப்படும்.

2. **தேவையான தகைமைகள் :**

(i) கல்வி/தொழில்சார் தகைமை.- இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

(ii) உடற் தகைமைகள்.- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணி புரிவதற்கும் பதவியின் கடமைகளை சிறப்பாக மேற்கொள்வதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(iv) வேறு தகைமைகள் :

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;
* இலங்கைச் சட்டத்தின் கீழ் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாக தண்டிக்கப்படாதிருத்தல் வேண்டும் ;
* விண்ணப்ப முடிவுத் திகதியின் போது இப்பதவியில் இணைத்துக்கொள்ளப்படுவதற்கு தேவையான தகைமைகளை எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iv) வயதெல்லை : விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3. **சேவையில் இணைத்துக் கொள்ளும் நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனை :**

(i) இந்நியமனம் ஓய்வூதியத்திற்கு உரித்துடையது. தங்களுக்குரிய ஓய்வூதிய முறை சம்பந்தமாக அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான முடிவுகளுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், விதவைகள் தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் காலத்திற்கு காலம் விடுக்கப்படும் உத்தரவுக்கமைய தங்களால் பங்களிப்புத் தொகை செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ii) இந்நியமனம் மூன்று (03) வருட கால தகுதிகாண் காலத்திற்குட்படும் ;

(iii) பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளுக்கேற்ப குறித்த தரத்திலான மொழித்திறனை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதுடன், அரச கரும மொழி தவிர்ந்த வேறொரு மொழி மூலத்தில் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள் குறித்த மொழித்திறன் தகுதிகாண் காலத்திற்குள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்;

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டு நிபந்தனைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்கத்தின் நிதிசார் நிபந்தனைகளுக்கும் திணைக்களமயப்படுத்தப்பட்ட ஏனைய பணிப்புரைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

*4.* ***சம்பள அளவுத்திட்டம்.***- இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 75,000.00-10 × 1,630 - ரூபா 91,300.00 (AGS2-2016) ஆகும்.

5. ஆரம்ப தகுதிகாண் நேர்முகப் பரீட்சையின் போது கீழ்க்காணும் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்:

| தொடர் இலக்கம் | புள்ளி வழங்கப்படும் துறை | புள்ளி | ஆகக்கூடிய புள்ளி |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 20 |
| | (i) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவகம்/பல்கலைக்கழமொன்றினால் வழங்கப்பட்ட சட்ட முதுமாணிப்பட்டம் (LLM) | 10 | |
| | (ii) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவகம்/பல்கலைக்கழமொன்றினால் சட்டம் (குறித்த துறை) தொடர்பில் வழங்கப்பட்ட டிப்ளோமா | 08 | |
| | (iii) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவகம்/பல்கலைக்கழமொன்றினால் வழங்கப்படும் சட்ட முதுமாணிப்பட்டம் (1 ஆம் வகுப்பில் சித்தி) (LLB) | 07 | |
| | (iv) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவகம்/பல்கலைக்கழமொன்றினால் வழங்கப்பட்ட சட்ட முதுமாணிப்பட்டம் (2 ஆம் வகுப்பு மேல் நிலை சித்தி) (LLB) | 06 | |
| | (v) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவகம்/பல்கலைக்கழமொன்றினால் வழங்கப்பட்ட சட்ட முதுமாணிப்பட்டம் (2 ஆம் வகுப்பு கீழ் நிலை சித்தி) (LLB) | 05 | |
| | (vi) இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதி வருட பரீட்சையின் முதலாம் வகுப்பு சிறப்பு சித்தி | 07 | |
| | (vii) இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதி வருட பரீட்சையின் இரண்டாம் வகுப்பு சிறப்பு சித்தி | 06 | |
| | அரச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் என்பது சட்டக் கல்விப் பேரவையினால் அங்கீகாரமளிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவகமொன்றாகும். | | |
| | (மேற்கூறப்பட்ட சகல கல்விசார் தகைமைகளும் அதிகபட்சமாக 20 புள்ளிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன) | | |
| | * மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துக் கல்வித் தகைமைகளும் சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். | | |
| 02 | **தொழில்சார் அனுபவம்** | | 20 |
| | (i) நீதிமன்ற வழக்கு முன்னெடுப்பு | 10 | |
| | (ii) பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணியாக அல்லது சட்ட ஆலோசகராக சேவையாற்றியதன் மூலம் வெளிக்காட்டிய திறன். | 10 | |
| | (மேற்குறித்த திறன்கள் தொடர்பில் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்) | | |
| | குறிப்பு : நீதிபதியொருவரினால் வழங்கப்படும் தொழில் திறன் தொடர்பான சான்றிதழ் ஒன்று மற்றும் 20 வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலத்தை பூரணப்படுத்தியுள்ள சட்டத்தரணிகள் இருவரிடம் பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ்கள் என்பன சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். சட்டமா அதிபர் திணைக்கள சட்ட உத்தியோகத்தர் மூலம் வழங்கப்படும் நன்னடத்தைச் சான்றிதழ் ஏற்புடையதாகாது. | | |

| தொடர் இலக்கம் | புள்ளி வழங்கப்படும் துறை | புள்ளி | ஆகக்கூடிய புள்ளி |
|---|---|---|---|
| 03 | **விசேட திறமைகள்** | | 20 |
| | (i) தொடர்பாடல் திறன் | 05 | |
| | (ii) சமயோசித பேச்சுத் திறன் | 05 | |
| | (iii) சபை முன்னிலையில் வெற்றிகரமாக தோன்றும் திறன் | 05 | |
| | (iv) மொழிகளைச் சிறந்த முறையில் கையாளும் திறமை | 05 | |
| 04 | **நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை** | | 40 |
| | (i) ஆளுமை | 10 | |
| | (ii) தலைமைத்துவ திறன் | 10 | |
| | (iii) சட்ட மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான அறிவு | 20 | |
| | **மொத்தம்** | | **100** |

6. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்**.- அனைத்துத் தகைமைகளினையும் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதி மற்றும் உரிய முறையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நகல் பிரதியும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களம் மூலம் விநியோகிக்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை.
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

7. **விண்ணப்பம் அனுப்புதல்** :

(i) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2020.04.15 ஆகும்.

(ii) கொழும்பு 12, சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதோடு, 2020.04.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "சட்டமா அதிபர், சட்டமா அதிபர் திணைக்களம், த. பெ. இல. 502, கொழும்பு 12, என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். 2020.04.15 ஆந் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(iii) விண்ணப்ப கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரச சட்டவாதி பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பமொன்று அல்லது அது சம்பந்தமான கடிதமொன்று தபாலின் போது காணாமல் போதல் அல்லது தாமதமாதல் தொடர்பில் செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக கருத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பத்தை தாமதிப்பதன் மூலம் ஏற்படக்கூடிய இழப்புக்களை விண்ணப்பதாரரே பொறுப்பேற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

08. **தவறான தகவல் வழங்குதல்**.- உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பிழையானதென இப்பதவியில் இணைத்துக்கொள்வதற்கு முன்னர் தெரியவந்தால் உங்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அத்தகைய பிழையான தகவல்கள் இப்பதவியில் இணைத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் தெரியவரின் அதற்குரிய நடவடிக்கையின் கீழ் எந்நேரத்திலும் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

09. வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நிரப்பாமல் விடுவதற்குமான உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு உள்ளது.

10. இவ்வர்த்தமானி அறிவித்தலில் காணப்படும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஏதாவது முரண்பாடு காணப்படின் சிங்கள மொழியே மேலோங்கி நிற்கும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

சட்டமா அதிபர்.

உயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி,
சட்டமாஅதிபர் திணைக்களம்,
கொழும்பு 12,
2020, பெப்புருவரி 28.

03-638

---

## இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், அநுராதபுரம்

### விண்ணப்பம்/நியமனப்பத்திரம் கோரல் மஹோபாத்யாய (துணை வேந்தர்) பதவி

1996 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழக 26 ஆம் இலக்க சட்டம் மற்றும் 2012 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க திருத்த சட்டம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2018, யூன் 28 ஆந் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை இல. 4/2018 இன் பிரகாரம் மஹோபாத்யாய பதவிக்கு விண்ணப்பங்கள் அல்லது பெயர் நியமித்தல்கள் தகைமையுள்ள பின்வரும் தகைமைகளையுடைய பிக்குகளிடமிருந்து கோரப்படுகின்றன.

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌத்த கற்கை நெறிகளில் அல்லது வேறேதாவது பாடத்தில் இரு வருடங்களுக்கு குறையாத காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிக்காக பெற்ற பட்டப்பின் பட்டதாரிப் பட்டம்.
2. கற்பித்தல் துறையில் பத்து வருட அனுபவம்;
3. கீழைத்தேய மொழிகளில் சிறந்த புலமையைக் கொண்டிருத்தல்;
4. உப்பசம்பாதவிற்குப் பின்னர் இருபது வருடங்களை பூர்த்தி செய்த சிறந்த ஒழுக்கமுடைய உப்பசம்பாத, பிக்கு.

மஹோபாத்யாய மூன்று (03) வருட காலத்திற்கு நியமிக்கப்படுவார். அவர் பல்கலைக்கழகத்தின் ஒரு முழுநேர அலுவலராவார் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலராவர் மற்றும் பிரதான கல்விசார் அலுவலராவார். மஹோபாத்யாய ஒரு உத்தாரித்ர சபாவின் பதவி வழி அங்கத்தவரும் பேரவையினதும் மூதவையினதும் தலைவரும் ஆவார். பல்கலைக்கழக வளாகத்தில் ஒழுக்கத்தைப் பேணுவதற்கான பொறுப்பையும் கொண்டிருப்பார். மஹோபாத்யாய பல்கலைக்கழகத்தின் கணக்கிடல் அலுவலரும் பேரவையின் எந்தவொரு தீர்மானம் மற்றும் பணிப்புரை ஆகியவற்றிற்கு அமைந்தொழுகும் அலுவலருமாவார். மஹோபாத்யாயவின் கடமையானது ஒரு செயற்பாட்டை அமுல் நடாத்துவதும் அல்லது அந்த செயற்பாட்டை பேரவையின் அல்லது மூதவையின் தீர்மானத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதை உறுதி செய்வதாகும். மஹோபாத்யாயவானவர் மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது அறுபத்தைந்து வயதைப் பூர்த்தியடையும் திகதி ஆகிய இரண்டில் எது முன்னால் நிகழுமோ அத்திகதிவரை மஹோபாத்யாய பதவியினை வகித்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள்/ அபேட்சகர்கள் இலங்கைப் பிரசை களாக இருத்தல் வேண்டும்.

மஹோபாத்யாயவானவர் பல்கலைக்கழகத்தின் உச்சமட்ட சம்பள மட்டத்தில் நியமனம் பெறவும் அரசாங்கம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற ஏனைய படிகளுக்கும் உரித்துடையவராவார். அவருக்கு உத்தியோகபூர்வ வாகனமும் எரிபொருள் படியும் பல்கலைக்கழக இடப்பரப்பிலேயே இருப்பிட வசதிகளும் வழங்கப்படும்.

விண்ணப்பத்துடன்/ நியமனங்களுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படல் வேண்டும்.

(i) பிறந்த திகதி அடங்கலாக விண்ணப்பதாரி/ வேட்பாளரின் பூர்த்தி செய்யப்பட்ட சுயதரவு.
(ii) மஹோபாத்யாயவானவர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கான நோக்கம் மற்றும் விண்ணப்பதாரி/ வேட்பாளர் எதனை அடைவதற்கு எதிர்பார்க்கின்றார் தொடர்பாக சுருக்கமான கட்டுரையொன்று.
(iii) பெயர் குறிப்பிடப்படுகின்றவரென்றால் அவரிட மிருந்து இணக்கக் கடிதமொன்று.
(iv) தொழில் வழங்குபவரிடமிருந்து விண்ணப்பதாரி/ அபேட்சகர் நியமனம் பெற்றால் அவர் இலங்கை பிக்கு அரசாங்க துறை, கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபைகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் மற்றும் இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் பணியாற்று

பவர் என்றால் விண்ணப்பதாரி நியமனத்திற்குப் பின்னர் விடுவிக்கப்படுவார் என்பதாக கடிதம்.

(v) தற்போது பதவி வகிப்பவர் விண்ணப்பதாரி எனின், அவ்வாறான விண்ணப்பதாரியானவர் அவரது பதவி வகித்த காலத்தில் பூர்த்தி செய்யப்பட்ட சாதனைகளின் அறிக்கையொன்று.

பிக்கு விண்ணப்பதாரிகள்/பெயர் குறிப்பிடப்பட்டவர்களில் மேலேயுள்ள திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள தகைமைகளை யுடைய மூன்று பெயர்களை தெரிவு செய்து உத்தரித்தார சபாவிற்கு சமர்ப்பித்த பின்னர், உத்தரித்தார சபாவானது ஒரு பிக்கு விண்ணப்பதாரியை தெரிவு செய்து அந்தப் பெயரை அதிமேதகு சனாதிபதிக்கு கௌரவ அமைச்சரின் ஊடாக பரிந்துரை செய்யும்.

மஹோபாத்யாய பதவிக்கான அனைத்து விண்ணப்ப தாரிகளும் ஆகக்குறைந்தது பத்து (10) நிமிட காலப்பகுதிக்கு தெரிவு செய்வதற்கு முன்னராக சுருக்கமான சமர்ப்பித்த லொன்றை முன்வைக்குமாறு அழைக்கப்படுவர்.

விண்ணப்பங்கள்/பெயர் குறிப்பிடப்பட்டவைகள் "பதிவாளர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், புத்தளம் வீதி அநுராதபுரம்" என்ற முகவரிக்கு 2020, மாச்சு 31 ஆந் திகதின்று பி. ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பத்தை/ பெயர் குறிப்பிடப்பட்டவைகள் அடக்கியுள்ள தபாலுறை மற்றும் உரித்தான பொருட்களுடன் இடது பக்க மேல் மூலையின் "Post of Mahopadyaya" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

முடும் நேரத்திற்குப் பின்னர் பெற்றுக்கொள்ளப்படும் மற்றும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படமாட்டாது.

U. D. தொடன்வல,
பதிவாளர் மற்றும் பேரவைக்கான செயலாளர்,
இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்,
அநுராதபுரம்.

03-473